# ஈரோடு மாவட்ட தொழில் மைய செயல்பாடுகள்: கலெக்டர் ஆய்வு



ஈரோடு, அக். 4–

ஈரோடு மாவட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில், மாவட்ட தொழில் மையத்தில் கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா நடைபெற்று வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில், மாவட்ட தொழில் மையத்தில் உற்பத்தி மற்றும் சேவைக்கு புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டமும், வியாபார நடவடிக்கைக்கு படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டமும், உற்பத்தி, சேவை மற்றும் வியாபார நடவடிக்கைக்கு அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டமும், குறு உணவுப் பொருட்கள் உற்பத்தி நிறுவன நடவடிக்கைக்கு பிரதம மந்திரியின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து கலெக்டர், மேற்கண்ட திட்டங்கள் தொடர்பாக நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில், நிர்வாகம், கணக்கு, முன்னுரிமை, பதிவு (மு) புதுப்பித்தல், மனுக்கள், பரிந்துரைத்தல், தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம், தொழில்நெறி வழிகாட்டல், தன்னார்வ பயிலும் வட்டம், மாற்றுத்திறனாளிகள் மற்றும் உதவித்தொகை உள்ளிட்ட பிரிவுகளை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். மேலும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெறும் பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்பு நடைபெற்றதை பார்வையிட்டார்.

மேலும், முதல்வரின் முகவரி, முதலமைச்சர் தனிப்பிரிவு மனு, மனு நீதி நாள் முகாம் ஆகியவற்றில் வேலைவாய்ப்பு தொடர்பாக வரப்பெற்ற மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

தொடர்ந்து, அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு, மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி, அங்கு வழங்கப்படும் பயிற்சிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, தொழிலாளர் துறை அலுவலத்தில் ஆய்வு மேற்கொண்டு, குழந்தை தொழிலாளர் முறை ஒழித்தல் தொடர்பாக, வரப்பெறும் மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது, பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) திருமுருகன், அரசினர் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சி அலுவலர் கணேசன், தொழிலாளர் உதவி ஆணையர்கள் முருகேசன் (ச.பா.தி), திருஞானசம்பந்தம் (அமலாக்கம்), உதவி இயக்குநர்கள் ஆனந்தகுமார் (அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்), ரா.ராதிகா (மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம்), மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் டி.டி.சாந்தி (தொழில்நெறி வழிகாட்டல்) உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



# ஜடையம்பாளையம் ஊராட்சியை பேரூராட்சியாக மாற்றுவதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு

மேட்டுப்பாளையம், அக். 4–

ஜடையம்பாளையம் ஊராட்சி கிராம சபை கூட்டம் ஜடையம்பாளையம் புதூர் விநாயகர் கோயிலில் நடைபெற்றது. ஊராட்சித் தலைவர் ஆர்.கே.பழனிசாமி தலைமை தாங்கினார். துணைத்தலைவர் மாரண்ணன் முன்னிலை வகித்தார். ஊராட்சி செயலாளர் நந்தினி வரவேற்று பேசினார். கூட்டத்தில் ஒன்றிய கவுன்சிலர் சண்முகசுந்தரம் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஊராட்சி ஒன்றிய அலுவலர் உட்பட அரசு அதிகாரிகள், ஊராட்சி உறுப்பினர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர், பொதுமக்கள், துப்புரவு பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், ஜடையம்பாளையம் ஊராட்சியை பேரூராட்சியாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளும் அரசின் முடிவை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஜடையம்பாளையம் ஊராட்சியாகவே தொடர பொதுமக்கள் விரும்புவதால் பேரூராட்சியாக மாற்ற வேண்டாம் என கேட்டுக்கொள்கிறோம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தூய்மை பணியாளர்களுக்கு சால்வை அணிவித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

# கோவையின் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம்

கோவை, அக். 4–

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக அன்னைத் தமிழுக்கு அருந்தொண்டாற்றி வரும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பெற்று வருகிறது.

முதுமைக்காலத்திலும் பொருள் வறுமை, தமிழ்த் தொண்டர் பெருமக்களைத் தாக்காவண்ணம் திங்கள்தோறும் ரூ.3500 மருத்துவப்படி ரூ.500 என நான்காயிரம் ரூபாய் உதவித்தொகையாக வழங்கப்பெறுகிறது.

அகவை முதிர்ந்த தமிழ்ச் சான்றோர் பெருமக்களுக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச் சலுகையும் வழங்கப்பெறுகிறது.

உதவித்தொகை பெற்ற தமிழறிஞர் பெருமக்களின் மறைவுக்குப் பின்னர், அவரின் மரபுரிமையருக்கு, அவர்தம் வாழ்நாள் முழுவதும் ரூ.2500 மற்றும் மருத்துவப்படி ரூ.500 என அத்திருத்தொண்டு தொடர்கிறது. இதுவரை 1334 அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் பயனடைந்துள்ளனர்.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் அகவை முதிர்ந்த தமிழறிஞர் பெருமக்களிடமிருந்து 2024–2025ஆம் ஆண்டிற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பெறுகின்றன.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் விண்ணப்பப்படிவத்தினை மண்டல, மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை, உதவி இயக்குநர் அலுவலகத்திலேயே நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்திலோ (www.tamilvalarchithurai.tn.gov.in) கட்டணமில்லாமல் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பெறுபவருக்கு முன்னர்க் கூறியதுபோல், திங்கள்தோறும் உதவித்தொகையாக ரூ.3500, மருத்துவப்படி ரூ.500 அவருடைய வாழ்நாள் முழுவதும் வழங்கப்பெறும்.

நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்களை கலெக்டர் அலுவலக வளாகத்தின் பழைய கட்டடம், முதல் தளம், அறை எண்.14இல் இயங்கிவரும் மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்தில் 31.10.2024க்குள் அளிக்கப்பெற வேண்டுமெனவும், நேரடியாக தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் அளிக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பெறமாட்டாது என கலெக்டர் கிராந்தி குமார் பாடி தெரிவித்துள்ளார்.



நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியம் கைகாட்டி பகுதியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்கப் புகைப்படக்கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டு, அரசின் நலத்திட்ட உதவிகள் குறித்து அறிந்து கொண்டனர்.

# தருமபுரியில் 5ந் தேதி மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

தருமபுரி, அக். 4–

தருமபுரி மாவட்டத்தில் மாவட்ட வேலை வாய்ப்பு (ம) தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்/ மாவட்ட இயக்க மேலாண்மை அலகு சார்பில் மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் சேலம் மெயின் ரோட்டில் உள்ள அரசு கலைக் கல்லூரி தருமபுரியில் 5ந் தேதி அன்று காலை 8 மணி முதல் மாலை 2 மணி வரை நடைபெறுகிறது.

தருமபுரி மாவட்டம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில் வேலைவாய்ப்பு முகாம் 5ந் தேதி காலை 8 மணி முதல் 2 மணி வரை தருமபுரி சேலம் மெயின் ரோட்டில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் நடத்தப்பட உள்ளது.

இதில் 8ம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு வரை படித்த 18வயதிற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தங்களுக்கு ஏற்ற வேலைவாய்ப்பினை தேர்வு செய்யலாம்.

மேலும், இந்த வேலை வாய்ப்பு முகாமில், வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய அனைத்து தொழில் நிறுவனங்களும் கலந்துகொண்டு தங்களது நிறுவனங்களுக்கு தகுதியான ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

எனவே, வேலைவாய்ப்பு பெற விருப்பமுள்ள ஆண்கள், பெண்கள்மற்றும்மாற்றுத்திறனாளிகள்இம்முகாமில்கலந்து கொண்டு பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு கலெக்டர் சாந்தி தெரிவித்தார்.


**டாடா கேபிடல் லிமிடெட்**

TATA

பதிவு அலுவலகம்: 11வது தளம், டவர் ஏ, பெனின்சுலா பிசினஸ் பார்க், கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை– 400013, இந்தியா.
CIN No. U65990MH1991 PLC060670

**டிமாண்ட் நோட்டீஸ்**

2002ம் ஆண்டு (''சட்டம்'') கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் மற்றும் 2002ம் (''விதிகள்'') வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிமுறைகளின் விதி 3–ன் கீழ்

கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்கள் (தனியாகவோ அல்லது ஒருங்கிணைந்த கடனாளர்கள்) ஆகியோருக்கு டாடா கேபிடல் லிமிடெட்டின் (TCL) (NCLTயின் சீரமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கு இணங்க டாடா கேபிடல் பைனான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட்டை மாற்றிக்கொண்ட நிறுவனம்) கீழ்க்கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் கீழ்க்கண்ட தேதியில் சட்டப் பிரிவு 13(12), விதி 3 மற்றும் பிரிவு 13(2) சட்டத்தின் கீழ் விரிவான டிமாண்ட் நோட்டீஸ்களை ஏற்கனவே அனுப்பியுள்ளார். டிமாண்ட் நோட்டீசில் கண்டுள்ள தொகையை இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கூறியிருந்தார். மேற்கண்ட அறிவிப்பின் நகல் பதிவு தபாலில் ஒப்புகைச் சீட்டுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது மற்றும் இந்த அறிவிப்பின் நகலை பெற விரும்பும் கடனாளர்கள் கம்பெனியின் சாதாரண அலுவலக நாளில் அலுவலக நேரத்தில் கீழ்க்கையொப்பமிட்ட அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கண்ட விஷயத்தில், கடன்தாரர்களால் அளிக்கப்பட்ட கடன் ஒப்பந்தம் மற்றும் இதர ஆவணங்கள்/எழுத்துப்பூர்வ ஆவணப்படி அவரவர் பெயர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தொகை மற்றும் காலம் (d)ல் குறிப்பிட்டுள்ள திரும்ப செலுத்தும் நாள் வரை வட்டி ஆகியவற்றை மேற்கண்ட அறிவிப்பு பெற்ற 60 நாட்களுக்குள் TCL–க்கு மேற்சொன்ன கடனாளர்கள் செலுத்த வேண்டும் என்று மீண்டும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. மேற்கண்ட கடனை திரும்ப செலுத்துவதற்காக கீழ்க்கண்ட ஈடுபெற்ற ஆஸ்திகளை மேற்சொன்ன கடன்தாரர் TCL வசம் அடமானம் வைத்துள்ளார்.

| கடன் கணக்கு எண் (a) | கடன்தாரர்கள்/ சட்ட வாரிதாரர்கள்/ சட்ட பிரதிநிதிகள் பெயர் (b) | ★கீழ்க்கண்ட தேதியில் மொத்த நிலுவைத் தொகை(ரூ.) (c) | டிமாண்ட் நோட்டீஸ் தேதி மற்றும் என்பிஏ தேதி (d) | ஈடுபெற்ற ஆஸ்திகள்/ அசையா சொத்துகள்/ அடமான சொத்துகள் விவரம் (e) |
|---|---|---|---|---|
| காலக் கடன்: 21798481 & 21810375 & உத்தரவாதமான அவசர கடன்: 21841213 | 1. M/s. கே.ஜி. டெனிம் லிமிடெட் (“கடன்தாரர்/ அடமானதாரர்”), 2. திரு. கே.ஜி. பாலகிருஷ்ணன். ("உத்தரவாததாரர்"). | 28 செப்டம்பர் 2024 அன்று ரூ.6,12,43,941.64/- (ரூபாய் ஆறு கோடியே பன்னிரெண்டு லட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத் தொன்று மற்றும் அறுபத்து நான்கு பைசா மட்டும்) | அக்டோபர் 01 2024 & செப்டம்பர் 12, 2024 | (கீழே அட்டவணையில் இன்னும் முழுமையாக விவரிக்கப் பட்டுள்ளது) |

★ டிமாண்ட் நோட்டீசில் குறிப்பிட்டுள்ள மேலும் கூடுதல் வட்டி, கூடுதல் வட்டி, இடைக்கால செலவுகள், கட்டணங்கள், தொகையை செலுத்தும் நாள் வரையிலான கட்டணங்கள் ஆகியவை முறையே விவரமாக கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கடன்தாரர்கள் TCLக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்த தவறினால், TCL மேற்கண்ட ஈடு செய்யப்பட்ட ஆஸ்திகள்/அசையா சொத்துக்கள் மீது மேற்கண்ட சட்டத்தின் பொருந்தக்கூடிய விதிகள் பிரிவு 13(4)–ன் கீழ் நடவடிக்கையை மேற்கொள்ளும். அதற்கான முழு பொறுப்பு மற்றும் கட்டணங்கள் மற்றும் விளைவுகள் மேற்கண்ட கடன்தாரர்கள்/சட்ட வாரிசுதாரர்கள்/சட்ட பிரதிநிதிகளையே சாரும்.

மேற்கண்ட சட்டத்தின் கீழ் மேற்கண்ட கடன்தாரர்கள்/சட்ட வாரிசுதாரர்கள்/சட்ட பிரதிநிதிகள் ஆகியோர் TCL–ன் எழுத்துப்பூர்வமான அனுமதியின்றி மேற்கண்ட அசையா சொத்துக்கள்/ஈடுசெய்யப்பட்ட ஆஸ்திகளை வேறு ஒருவருக்கு மாற்றவோ, விற்பனை செய்யவோ, குத்தகைக்கு விடவோ தடைசெய்யப்பட்டுள்ளது. சட்டம் மற்றும் விதிகளை எவரேனும் மீறுவதாக இருந்தால் அது தொடர்பான சட்டத்தின் கீழ் அவர்களுக்கு சிறை தண்டனையோ அல்லது அபராதமோ விதிக்கப்படும்.

**அட்டவணை** A
ஈடுபெற்ற சொத்துக்களின் விவரம்
கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் சிறு துண்டுகளும் அல்லது அனைத்து பகுதிகளும்:
அயிட்டம் எண் 1

| 1 | பகுதி I: சொத்தின் விவரம்: ஆவண எண். 1981/2018ன் படி. | |
|---|---|---|
| i | சர்வே எண். | S.No- 718/2A, 718/3A, 718/4A2A,718/4A2B |
| | வருவாய் பதிவின்படி | S.No- 718/2A, 718/3A, 718/4A2A,718/4A2B |
| ii | மொத்த விஸ்தீரணம் | 5.45 ஏக்கர் |
| | வரி ரசீது படி கதவு எண் | கதவு எண். – 3/95F, 3/150 TO 157, 3/150C1 TO 3/159C9, 6/159A1 TO A12, 6/159B1, B2 |
| iii | இடத்தின் பெயர், கிராமம், நகரம், பதிவு, சார் பதிவு மாவட்டம் போன்றவை. | ஜடையம்பாளையம் கிராமம், மேட்டுப்பாளையம் தாலுக்கா, கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் சார் பதிவு மாவட்டம். |

(i) ச.எண். 718/2Aல் உள்ள 0.75 ஏக்கர் நிலத்தின் முழு விஸ்தீரணத்திற்கான எல்லைகள்
(ii) ச.எண். 718/3Aல் உள்ள 1.93 ஏக்கர் நிலத்தின் முழு விஸ்தீரணத்திற்கான எல்லைகள்
(iii) ச. எண். 718/4Aல் உள்ள 0.77 ஏக்கர் நிலத்தின் முழு விஸ்தீரணத்திற்கான எல்லைகள்
(iv) ச. எண். 718/4A 2Aல் உள்ள 1.16 ½ ஏக்கர் நிலத்தின் முழு விஸ்தீரணத்திற்கான எல்லைகள்.
(v) ச. எண். 718/4A 2Bல் உள்ள 0.83 ½ ஏக்கர் நிலத்தின் முழு விஸ்தீரணத்திற்கான எல்லைகள் மற்றும் பாதை மற்றும் அனைத்து உரிமைகளுடன்.

அயிட்டம் எண் 2

| 1 | பகுதி I: சொத்தின் விவரம்: ஆவண எண். 1974/2018ன் படி. | |
|---|---|---|
| i | சர்வே எண். | S.No- 97/1, 97/2, 97/3, 97/4A, 97/4B, 97/4C, 97/4D, 98/1, 98/2 |
| | வருவாய் பதிவின்படி | S.No- 97/1, 97/2, 97/3, 97/4A, 97/4B, 97/4C, 97/4D, 98/1, 98/2 |
| ii | மொத்த விஸ்தீரணம் | 9.42 ஏக்கர் |
| | வரி ரசீது படி கதவு எண் | கதவு எண். – 3/95F, 3/150 TO 157, 3/150C1 TO 3/159C9, 6/159A1 TO A12, 6/159B1, B2 |
| iii | இடத்தின் பெயர், கிராமம், நகரம், பதிவு, சார் பதிவு மாவட்டம் போன்றவை. | ஜடையம்பாளையம் கிராமம், மேட்டுப்பாளையம் தாலுக்கா, கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் சார் பதிவு மாவட்டம். |

(i) ச.எண். 97/1ல் உள்ள 0.14 ஏக்கர் நிலத்தின் முழு விஸ்தீரணத்திற்கான எல்லைகள்
(ii) ச.எண். 97/2ல் உள்ள 2.76 ஏக்கர் நிலத்தின் முழு விஸ்தீரணத்திற்கான எல்லைகள்
(iii) ச.எண். 97/3ல் உள்ள 0.07 ஏக்கர் நிலத்தின் முழு விஸ்தீரணத்திற்கான எல்லைகள்
(iv) ச.எண். 97/4Aல் உள்ள 0.74 ஏக்கர் நிலத்தின் முழு விஸ்தீரணத்திற்கான எல்லைகள்
(v) ச.எண். 97/4Bல் உள்ள 0.54 ஏக்கர் நிலத்தின் முழு விஸ்தீரணத்திற்கான எல்லைகள்
(vi) ச.எண். 97/4Cல் உள்ள 0.65 ஏக்கர் நிலத்தின் முழு விஸ்தீரணத்திற்கான எல்லைகள்
(vii) ச.எண். 97/4Dல் உள்ள 0.88 ஏக்கர் நிலத்தின் முழு விஸ்தீரணத்திற்கான எல்லைகள்
(viii) ச.எண். 98/1ல் உள்ள 1.67 ஏக்கர் நிலத்தின் முழு விஸ்தீரணத்திற்கான எல்லைகள்
(ix) ச.எண். 98/2ல் உள்ள 1.79 ஏக்கர் நிலத்தின் முழு விஸ்தீரணத்திற்கான எல்லைகள் மற்றும் பாதை மற்றும் அனைத்து உரிமைகளுடன்.

அயிட்டம் எண் 3

| 1 | பகுதி I: சொத்தின் விவரம்: ஆவண எண். 1975/2018ன் படி. | |
|---|---|---|
| i | சர்வே எண். | S.No- 719/6, 719/5 |
| | வருவாய் பதிவின்படி | S.No- 719/5, 719/6 |
| ii | மொத்த விஸ்தீரணம் | 9.56 ஏக்கர் |
| | வரி ரசீது படி கதவு எண் | கதவு எண். – 3/95F, 3/150 TO 157, 3/150C1 TO 3/159C9, 6/159A1 TO A12, 6/159B1, B2 |
| iii | இடத்தின் பெயர், கிராமம், நகரம், பதிவு, சார் பதிவு மாவட்டம் போன்றவை. | ஜடையம்பாளையம் கிராமம், மேட்டுப்பாளையம் தாலுக்கா, கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் சார் பதிவு மாவட்டம். |

(i) ச.எண். 719/6ல் உள்ள 5.70 ஏக்கர் நிலத்தின் முழு விஸ்தீரணத்திற்கான எல்லைகள்
(ii) ச.எண். 719/5ல் உள்ள 3.86 ஏக்கர் நிலத்தின் முழு விஸ்தீரணத்திற்கான எல்லைகள் மற்றும் பாதை மற்றும் அனைத்து உரிமைகளுடன்.

**தேதி:** அக்டோபர் 4, 2024 — **ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**இடம்:** மும்பை — **டாடா கேபிடல் லிமிடெட்**



**தேசிய தீர்ப்பாயத்தின் சென்னை பெஞ்ச் கம்பெனி சட்ட முன்**
**CP(CAA)/56/(CHE)/CAA/2024**
**நிறுவன சட்டம், 2013 மற்றும் பிரிவு 230 முதல் 232வரை மற்றும் நிறுவன சட்டம், 2013 ன் பிற பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் லிங்க் அப் டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் லிங்க் அப் அப்பேரல்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் இன்னோவேட்டிவ் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட் மற்றும் அந்தந்த பங்குதாரர்கள் மற்றும் கடனாளிகளுக்கு இடையேயான ஏற்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு விதிகள்**

**இன்னோவேடிவ் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்**
நிறுவனங்கள் சட்டம், 1956 ன் கீழ் இணைக்கப்பட்ட நிறுவனம், அதன் பதிவு அலுவலகம், எண். 81, விக்யான் விஹார், புதுடெல்லி- 110 092 ...மனுதாரர் 1/ பரிமாற்ற நிறுவனம்

**லிங்க் அப் டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட்**
நிறுவனங்கள் சட்டம், 1956 ன் கீழ் இணைக்கப்பட்ட ஒரு நிறுவனம், அதன் பதிவு அலுவலகம், எண். 6AB-7AB, ஸ்ரீதேவி குப்பம் சாலை, குமரன் காலனி, வளசரவாக்கம், சென்னை - 600087, தமிழ்நாடு. ...மனுதாரர் 2/ பிரிக்கப்பட்ட நிறுவனம் / பரிமாற்ற செய்யப்பட்ட நிறுவனம்

**லிங்க் அப் அப்பேரல்ஸ் பிரைவேட் லிமிடெட்**
நிறுவனங்கள் சட்டம், 1956 ன் கீழ் இணைக்கப்பட்ட ஒரு நிறுவனம், அதன் பதிவு அலுவலகம், எண். 6AB-7AB, ஸ்ரீதேவி குப்பம் சாலை, குமரன் காலனி, வளசரவாக்கம், சென்னை - 600087, தமிழ்நாடு. ...மனுதாரர் 3/ விளைவாக வரும் நிறுவனம்

**அறிவிப்பு**

21 ஆகஸ்ட் 2024 மற்றும் அதற்கு பிந்தைய 11 செப்டம்பர் 2024 தேதியிட்ட உத்தரவுகளின் படி, தேசிய தீர்ப்பாயத்தின் சென்னை பெஞ்ச், மனுதாரர் நிறுவனங்கள் **(இன்னோவேட்டிவ் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், லிங்க் அப் டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் லிங்க் அப் அப்பேரல்ஸ் பிரைவேட் லிமிடெட்),** பங்குதாரர்கள் மற்றும் கடனாளிகள் அவர்களுக்குள், நிறுவன சட்டம் 2013 ன் பிரிவு 230 முதல் 232 ன் கீழ், செய்துகொண்ட ஒட்டுமொத்த ஏற்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு கூட்டு ஒப்பந்தத்தை, 6 நவம்பர் 2024 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

இந்த மனுக்களை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பும் எந்தவொரு நபரும், மனுதாரரின் வழக்கறிஞருக்கு, அவரே அல்லது அவரது வழக்கறிஞரோ கையொப்பமிடப்பட்ட பிரமாணப் பத்திரத்தை மனுதாரரின் வழக்கறிஞருக்கு விசாரணைக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக பெயர் மற்றும் முகவரியுடன் அனுப்ப வேண்டும்.

நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தியவுடன் மனுவின் நகல் கீழே கையொப்பமிடப்பட்ட நபரால் வழங்கப்படும்.

தேதி: 04, அக்டோபர் 2024, இடம்: சென்னை

பவன் ஜபக், மனுதாரரின் வழக்கறிஞர்
புதிய எண். 115, தளம், லஸ் சர்ச் சாலை, மயிலாப்பூர், சென்னை - 600004




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாமக்கல் மாவட்டத்திற்கு அரசு விழாவில் கலந்து கொள்ள வருகை தர உள்ளதையொட்டி, நாமக்கல் மாவட்டம் பொம்மைகுட்டை மேடு பகுதியில் விழா நடைபெறவுள்ள இடம் தேர்வு செய்வது குறித்து கலெக்டர் உமா தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், நாமக்கல் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு எஸ்.பி.ராஜேஸ்கண்ணன் ஆகியோர் முன்னிலையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின்போது, புதுச்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் கௌதம், தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் ஜெய்பிரகாஷ் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# நீலகிரி மாவட்ட புதிய காஜி தேர்வுக்குழு உறுப்பினர்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

நீலகிரி, அக். 4–

நீலகிரி மாவட்டத்தில் இஸ்லாமிய மக்களின் பிரதிநிதியாக மாவட்ட காஜியின் பதவி காலம் 13.9.2023 அன்று மூன்று ஆண்டுகள் முடிவடைந்த நிலையில், தற்போது புதிய காஜி நியமனம் செய்வதற்கு மாவட்ட அளவிலான தேர்வுக்குழு உறுப்பினர்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

மேலும் மாவட்ட தேர்வுக் குழுவில் கலெக்டர் தலைவராகவும் மற்றும் 5 தகுதிவாய்ந்த உலமாக்கள் (ஆலிம் அல்லது பாசில் அல்லது முப்தியாக இருக்க வேண்டும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரபுக் கல்லூரியில் பேராசிரியராக ஆசிரியராகப் பணியாற்ற வேண்டும்) மற்றும் முஸ்லீம் குடிமக்களுக்கு சமூக சேவை மற்றும் சமுதாயத்தை மேம்படுத்துவதில் தன்னை அர்ப்பணித்து நற்பெயர் பெற்ற 2 இஸ்லாமிய முக்கியஸ்தர்கள் தேர்வுக்குழு உறுப்பினர்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேற்படி தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களின் புகைப்படத்துடன் கூடிய சுய விவரக் குறிப்புகள் மற்றும் கல்விச் சான்றிதழ்கள் ஆகிய விவரங்களுடன் எதிர்வரும் 10ந் தேதி மாலை 5 மணிக்குள் பிங்கர் போஸ்டில் அமைந்துள்ள கலெக்டர் கூடுதல் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலத்தில் நேரில் சமர்ப்பிக்குமாறு கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.


ICICI Home Finance

**கார்ப்பரேட் அலுவலகம்:** ஐசிஐசிஐ எச்எப்சி டவர், அந்தேரி - குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை 400059, இந்தியா
**பதிவு அலுவலகம்:** கடை எண். 102, 103 மற்றும் 115, 1வது தளம், கதவு எண். 483, அசோகா பிளாசா, டாக்டர். நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர் 641018

**தனியார் முறை மூலம் அசையாச் சொத்துகளை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(8) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை தனியார் முறை மூலம் விற்பனை செய்ய விற்பனை அறிவிப்பு.

ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (ஐசிஐசிஐ எச்எப்சி) கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்ட சொத்தை விற்பனை செய்வதற்காக பல மின்னணு ஏலங்களை நடத்தியது, இருப்பினும், அத்தகைய அனைத்து மின்ஏலங்களும் தோல்வியடைந்தன. இப்போது, ஒரு ஆர்வமுள்ள வாங்குபவர் ஐசிஐசிஐ எச்எப்சியை அணுகி, அந்த சொத்தை ரூ.48,00,000/-க்கு வாங்க விரும்புகிறார்.

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்ட, ஈடுபெற்ற கடன் வழங்கியவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள/ஈடாக உள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள், "எங்கே எப்படி உள்ளதோ அப்படியே", "உள்ளது உள்ளபடி" மற்றும் 'எவ்வாறு உள்ளதோ அவ்வாறு" இங்கே கொடுக்கப்பட்டுள்ள சுருக்கமான விவரங்களின்படி தனியார் முறை மூலம் விற்பனை செய்யப்படும்.

| வ. எண் | கடன்தாரர்/ உடன் கடன்தாரர்கள் / உத்தரவாத தாரர்கள் / சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர்/ கடன் கணக்கு எண். | ஈடுபெற்ற சொத்தின் (கள்) விவரங்கள், தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருந்தால் | நிலுவைத் தொகை | ரிசர்வ் விலை டேவணித் தொகை டெபாசிட் | சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் | ஏலத் தேதி மற்றும் நேரம் | ஏலத் தேதிக்கு ஒரு நாள் முன் | SARFAESI நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|
| (A) | (B) | (C) | (D) | (E) | (F) | (G) | (H) | (I) |
| 1 | பி உமாமகேஸ்வரி (கடன்தாரர்) கே பழனிசாமி (உடன் கடன்தாரர்) LHCBT00001354095 & LHCBT00001354097 | எஸ்.எப்.எண்.162, வீட்டு மனை எண். 6, சரவணம்பட்டி கிராமம், காந்திபுரம் சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் பதிவு மாவட்டத்தில் உள்ளது. | ரூ. 73,89,043/- (செப்டம்பர் 20, 2024 அன்று) | ரூ. 48,00,000/- ரூ.4,80,000/- | 11 அக்டோபர் 2024 காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை | 22 அக்டோபர் 2024 மதியம் 2 மணி முதல் மாலை 3 மணி வரை | 21 அக்டோபர் 2024 | சுவாதீனம் |

எங்கள் ஏல நிறுவனமான **மேட்ஸ் நெட் பிரைவேட் லிமிடெட்டின்** இணையதளத்தில் (URL Link- https://assets.matexauctions.com) ஆன்லைன் ஏலம் நடத்தப்படும். வருங்கால ஏலதாரர்(கள்) விளம்பரத்தின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் கிளை அலுவலக முகவரியில் **அக்டோபர் 21, 2024 அன்று மாலை 4.00 மணி** அல்லது அதற்கு முன் டேவணித் தொகை டெபாசிட்டை (EMD) RTGS/ டிமாண்ட் டிராப்ட் (DD) மூலம் (அட்டவணை E ஐப் பார்க்கவும்) சமர்ப்பிக்க வேண்டும். வருங்கால ஏலதாரர்(கள்) பதிவுப் படிவம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் படிவத்தின் கையொப்பமிடப்பட்ட நகலை ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் மேற்கண்ட கிளை அலுவலக முகவரியில், **அக்டோபர் 21, 2024 அன்று மாலை 05.00 மணி** அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்க வேண்டும். டேவணித் தொகை டெபாசிட்டிற்கான டிமாண்ட் டிராப்ட் (DD) தேசியமயமாக்கப்பட்ட/பட்டியலிடப்பட்ட வங்கியிலிருந்து, கோயம்புத்தூரில் மாற்றத்தக்க வகையில் "**ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் -ஆக்ஷன்**" என்ற பெயரில் இருக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள ஆர்வமுள்ள வாங்குபவர் வழங்கும் தொகையை விட அதிகமாக தங்கள் ஏலங்களை சமர்ப்பிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(8) மற்றும் விதி 9(1)–ன்கீழ் மேற்கூறிய ஆர்வமுள்ள வாங்குபவர் வழங்கும் தொகையை விட அதிகமான ஏலங்கள் ஐசிஐசிஐ எச்எப்சியால் பெறப்படாவிட்டால், அடமானம் வைக்கப்பட்ட சொத்து அந்த ஆர்வமுள்ள வாங்குபவருக்கு விற்கப்படும் என்று இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

ஆய்வு, ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது டெண்டர்களை சமர்ப்பித்தல் தொடர்பான கூடுதல் விளக்கங்களுக்கு, ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டை 9920807300 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி எந்த ஒரு காரணத்தையும் அளிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு. விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, https://www.icicihfc.com/ஐப் பார்வையிடவும்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
தேதி : 4.10.2024 | இடம் : கோயம்புத்தூர் — ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் I CIN : U65922MH1999PLC120106



MANAPPURAM HOME FINANCE LTD.

**மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்**
முன்பு மணப்புரம் ஹோம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
CIN : U65923K12010PIC039179
யூனிட் 301–315, 3வது தளம், ஏ விங், 'கனகியா வால் தெரு', அந்தேரி–குர்லா சாலை, அந்தேரி கிழக்கு, மும்பை 400093,

**சுவாதீன அறிவிப்பு** (அசையா சொத்து)

கீழே கையொப்பமிட்டுள்ள மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட் ("MAHOFIN")டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் *(சட்டத்தின்) கீழும் (54 ஆப் 2002), மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 9வது விதிமுறைக்கு ஏற்பவும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர் மேற்குறிப்பிட்டுள்ள தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(4) *(சட்டம்) மற்றும் மேற்சொன்ன விதிகளின் விதி 9ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும் அடையாள சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு செலுத்த வேண்டிய தொகைக்கு பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

| வ. எண். | கடன்தாரர் மற்றும் உடன் கடன்தாரர் பெயர்/ கடன் கணக்கு எண்/கிளை | இது தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள ஈடுபெற்ற சொத்தின் விவரம் | அறிவிப்பு அனுப்பப்பட்ட தேதி மற்றும் செலுத்த வேண்டிய தொகை | சுவாதீன தேதி |
|---|---|---|---|---|
| 1 | சத்யா K, செல்வம் P/ MHL00130013070/ கோயம்பத்தூர் | ஆர்.எஸ். எண் (பழையது) 60, டி.எஸ்.எண். 91, வார்டு சி, பிளாக் எண். 10, கதவு எண்.173A, சிக்கதாசம்பாளையம், சிறுமுகை சாலை, சிக்கதாசம்பாளையம், மேட்டுப்பாளையம் கிராமம், அம்மன் கோவிலுக்கு அருகில், மேட்டுப்பாளையம் தாலுகா, கோயம்புத்தூர் மாவட்டம், தமிழ்நாடு, பின்கோடு: 641301 | 16-07-2024 & ரூ.420435/- | 30-09-2024 |

**தேதி : அக்டோபர் 04, 2024** — **ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,**
**இடம் : கோயம்புத்தூர்** — **மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்**